செ.வெ.எண்.300/2009/செமதொஅ நாள்: 15.09.2009

காஞ்சிபுரம் அறிஞர் அண்ணா பட்டு கூட்டுறவு சங்கத்தின் மூலம் ரூ.3.30 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்ட கலையரங்கத்தினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் திறந்து வைத்தார்.

பெரிய காஞ்சிபுரம், அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளியில் புதிய கலையரங்கம் திறப்பு விழா நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் கலந்து கொண்டு காஞ்சிபுரம் அறிஞர் அண்ணா பட்டு கூட்டுறவு சங்கத்தின் மூலம் ரூ.3.30 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய கலையரங்கத்தினை திறந்து வைத்து, 761 மாணவிகளுக்கு இலவச மிதிவண்டிகளை வழங்கி விழாப் பேருரையாற்றினார்.

“ பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நிறைவு விழாவில் காஞ்சிபுரம் அறிஞர் அண்ணா பட்டு கூட்டுறவு சங்கத்தால் அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளிக்கு ரூ.3.30 இலட்சம் மதிப்பில் உவந்தளிக்கப்பட்ட கலையரங்கத்தினை திறந்து வைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். எந்த சமூக பலமும் இல்லாமல் தனது பேச்சாற்றலாலும், எழுத்தாற்றலாலும் நாட்டு மக்களை கவர்ந்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். தமிழர்களுக்கு சமூகத்தில் அந்தஸ்தினை உருவாக்கி தந்தவர். சென்னை ராஜஸ்தானி என்று இருந்த மாநிலத்தின் பெயரை தமிழ்நாடு என பெயர் மாற்றம் செய்தவர் அண்ணா. 1967ல் ஆட்சிக்கு வந்தபின் சுயமரியாதை திருமணங்கள் சட்டப்படி செல்லும் என சட்டம் இயற்றி தந்தை பெரியாரின் கனவுகளை நிறைவேற்றியவர் அண்ணா.

தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமூகத்தினை சேர்ந்த மக்களுக்காக என்னென்ன திட்டங்களை தீட்டி, செயல்படுத்த வேண்டும் என பேரறிஞர் அண்ணா அவர்கள் கனவு கண்டாரோ அந்த கனவை இன்று நிறைவேற்றி மக்களை வாழவைப்பவர் தலைவர் கலைஞர் ஆவார். நாட்டின் வருங்கால தூண்களாக விளங்கும் நீங்கள் பேரறிஞர் அண்ணாவின் புத்தகங்களை படித்து வாழ்வில் உயர்வடைய வேண்டும். என கேட்டுக் கொண்டார்.

இவ்விழாவில் காஞ்சிபுரம் அறிஞர் அண்ணா பட்டு கூட்டுறவு சங்கத்தின் உதவி இயக்குநர் திரு.சு.இராசு அனைவரையும் வரவேற்றார். முடிவில் அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியை திருமதி.சிவ.அருண்மொழி நன்றி கூறினார். காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் திருமதி.சக்தி பெ.கமலாம்பாள், மாவட்ட ஊராட்சித் தலைவர் திரு.த.துரைசாமி, காஞ்சிபுரம் நகரமன்றத் தலைவர் திரு.வி.இராஜேந்திரன், மாநில கைத்தறி ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் திரு.சி.கே.வஜ்ஜிரவேல், திரு.சி.வி.எம்.அ.பொன்மொழி, மாவட்ட கைத்தறி ஆலோசனைக் குழு உறுப்பினர் திரு.சி.வி.எம்.அ.சேகர், மாவட்ட தொலைபேசி ஆலோசனைக்குழு உறுப்பினர் திரு.கே.ஆறுமுகம், காஞ்சிபுரம் ஒன்றியக்குழுத் தலைவர் திரு.பி.எம்.குமார், மாவட்ட வேளாண் விற்பனைக்குழு தலைவர் திரு.வி.எஸ்.ராமகிருஷ்ணன், முதன்மை கல்வி அலுவலர் திரு.வெ.ரமணா, கைத்தறி மற்றும் துணிநூல் துறை துணை இயக்குநர் திரு.பழனிச்சாமி, மாவட்ட கல்வி அலுவலர் திரு.சுப்பிரமணியன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.எம்.அசோகன், உதவி மக்கள் தொடர்பு அலுவலர்கள் திரு.ரெ.சுப்ரமணியன், திரு.இரா.நடராசன், பெற்றோர் ஆசிரியர் கழக துணைத் தலைவர் திரு.எஸ். இராஜாபாதர், உள்ளாட்சி அமைப்புக்களின் பிரதிநிதிகள், பட்டு கூட்டுறவு சங்க அலுவலர்கள், ஆசிரிய பெருமக்கள் மற்றும் மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்

செய்தி வெளியிடுபவர்
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.